## இலங்கை

**சர்வதேச மதச் சுதந்திர அறிக்கை, 2007**
**ஜனநாயகம், மனித உரிமைகள், தொழிற் பணியகத்தினால் வெளியிடப்பட்டது.**

அரசியல் யாப்பு, பௌத்த மதத்திற்குத் 'தலையாய இட'த்தை வழங்கியுள்ளது. ஆனால், பௌத்த சமயம், அரச மதமாகக்கொள்ளப்படவில்லை. ஏனைய சமயங்களைச் சேர்ந்தவர்கள், தத்தமது சமயங்களைச் சுதந்திரமாகப் பின்பற்றுவதற்கான உரிமைக்கு அரசியல் யாப்பு வழிவகுத்துள்ளது. இந்த உரிமையை, அரசாங்கம் பகிரங்கமாக ஆதரித்த போதிலும், நடைமுறையில், சில பிரதேசங்களில் பிரச்சினைகள் இடம்பெற்றுள்ளன.

இந்த அறிக்கை உள்ளடக்கும் காலப்பகுதியில், சமயச் சுதந்திரத்திற்கு அரசாங்கம் வழங்கும் மரியாதை தொடர்பான அந்தஸ்தில் எவ்வித மாற்றமும் இல்லை.

2004ஆம் ஆண்டில் முதன்முதலாக அறிமுகப்படுத்தப்பட்ட, மதமாற்றத்திற்கு எதிரான சட்டவாக்கம் தொடர்பாகப் பாராளுமன்றம், நடவடிக்கை எதையும் மேற்கொள்ளவில்லை. 2004ஆம் ஆண்டு, மே மாதத்தில், ஜாதிக ஹெல உருமயக் கட்சி (JHU), 'நன்னெறிசாராத' மதமாற்றங்களைக் குற்றமெனக் கருதக்கூடிய விதத்தில் பாராளுமன்றத்தில் ஒரு சட்டமூலத்தைச் சமர்ப்பித்தது. அச்சட்ட மூலத்தின் சில பகுதிகள் அரசியல் யாப்பிற்கு ஒவ்வாதனவென உச்ச நீதிமன்றம் விதித்தபோதிலும் ஜாதிக ஹெல உருமயக் கட்சி, 2005ஆம் ஆண்டு, மே மாதம் 6ஆந் திகதி, இரண்டாம் வாசிப்பிற்காகச் சட்டமூலத்தைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தது. இதன் பின்னர், உத்தேசச் சட்ட மூலம், விசேஷ பாராளுமன்றக் குழுவொன்றின் கவனத்திற்கு அனுப்பப்பட்டது. இக்குழு 2006ஆம் ஆண்டு ஏப்ரில் மாதம் முதற் தடவையாகக் கூடியது. இவ்வறிக்கை உள்ளடக்கும் காலப்பகுதியின் முடிவு வரை, சட்ட மூலம், இக்குழுவின் கவனத்தின் கீழ் இருந்தது.

2003ஆம் ஆண்டின் இறுதிப்பகுதி முதல், கிறிஸ்தவத் தேவாலயங்களின் மீதும் பாதிரியார்களின் மீதும் தேவாலய வழிபாட்டாளர்களின் மீதும் பல தாக்குதல்கள் நாட்டில் இடம்பெற்றன. 2003 ஆம் ஆண்டு முதல், 300இற்கும் மேற்பட்ட தாக்குதல்கள் இடம் பெற்றதாகக் குற்றச்சாட்டுக்கள் செய்யப்பட்டுள்ளன. இவற்றுள், பல டசின் குற்றச்சாட்டுக்களை ஐக்கிய அமெரிக்க தூதராலயம் உறுதி செய்துள்ளது. இதற்குத் துலங்கும் விதத்தில், முக்கியமான, அரசியல், சமயத் தலைவர்கள், இத்தாக்குதல்களைப் பகிரங்கமாகக் கண்டித்துள்ளனர். இச்சம்பவங்கள் தொடர்பாக, ஏறத்தாழ பன்னிரெண்டு பேரை பொலீஸ் கைதுசெய்து வழக்குத்தொடர்ந்துள்ளது.

பௌத்தத் தீவிரவாதிகள், அங்கும் இங்குமாகக் கிறிஸ்தவத் தேவாலயங்களைத் தாக்கி வந்துள்ளனர். கட்டாய மதமாற்றங்கள் பற்றி இடம்பெற்றவாறிருக்கும் குற்றச்சாட்டுக்களின் காரணமாக, சமூகத்தில் சில நெருக்கடி நிலைகள் இடம்பெற்றதுடன் மதமாற்றங்களுக் கெதிராகச் சட்டமியற்றல் பற்றிய வாதவிவாதங்களும் இடம்பெற்றன.

மனித உரிமைகளை முன்னேற்றுவதற்கான, தனது முற்றுமுழுதான கொள்கையின் ஒரு பகுதியாக, ஐக்கிய அமெரிக்க அரசாங்கம், சமயச் சுதந்திரம் பற்றிய பிரச்சினைகளை ஆராய்கின்றது. தேவாலயத் தாக்குதல்கள் பற்றிய, ஐக்கிய அமெரிக்க அரசாங்கத்தின் கவலையை ஐக்கிய அமெரிக்கத் தூதரக அலுவலர்கள், அரசாங்கத் தலைவர்களுக்கு அறிவித்து, குற்றவாளிகளைக் கைது செய்து, வழக்குத் தொடுக்கும்படி, அவர்களைத் தூண்டியது. மத மாற்றத்திற்கு எதிரான சட்டங்கள், மதச் சுதந்திரத்தின் மீது ஏற்படுத்தக்கூடிய பாதகமான தாக்கங்களைப் பற்றியும் தாம் கொண்டுள்ள கவலையைத் தூதரக அலுவலர்கள் அரசாங்கத்திடம் எடுத்துக்கூறினார்கள். ஐக்கிய அமெரிக்க அரசாங்கம், பொதுவான மதச் சுதந்திரம் தொடர்பாகத் தான் கொண்டுள்ள அக்கறைகளைப் பற்றித் தொடர்ந்து, சமயத் தலைவர்களுடன் கலந்துரையாடி வருகின்றது.

### பிரிவு I: மதம் சார்ந்த குடித்தொகையியல்

இலங்கை, 25,322 சதுர மைல் பரப்பளவைக் கொண்டுள்ளது. அதன் சனத்தொகை, 19.4 மில்லியனாகும். இங்கு, பௌத்த மதம், இந்து மதம், இஸ்லாமிய மதம், கிறிஸ்தவ மதம் என்பன பின்பற்றப்படுகின்றன. சனத்தொகையின் ஏறத்தாழ 70 சதவீதத்தினர் பௌத்தர்களாகவும், 15 சதவீதத்தினர் இந்துக்களாகவும், எட்டு சதவீதத்தினர் கிறிஸ்தவர்களாகவும் ஏழு சதவீதத்தினர் முஸ்லிம்களாகவும் இருக்கின்றனர். கிறிஸ்தவர்கள், மேற்கில் செறிவாக உள்ள போக்கு காணப்படுகின்றது; கிழக்கின் பெரும் பகுதி முஸ்லிம்களைக் கொண்டிருக்க, வடக்கு, ஏறத்தாழ முழுமையாக இந்து சமயத்தவர்களைக் கொண்டதாக இருக்கின்றது.

பெரும்பான்மையாகவுள்ள சிங்கள சமுதாயத்தின் உறுப்பினர்களுள் பெருந்தொகையானோர், தேரவாத பௌத்தர்களாவார்கள். இனச் சிறுபான்மையினர்களுள் பெருந்தொகையினராக இருக்கும் தமிழர்கள் இந்துக்களாவர். ஏறத்தாழ, சகல முஸ்லிம்களும் சுன்னிகளாவர்; போரா சமுதாயத்தினர் உட்பட, இவர்களுள் ஒரு சிறு தொகையினர் ஷியாக்களாவர். கிறிஸ்தவர்களுள் ஏறத்தாழ 80 சதவீதத்தினர் ரோமன் கத்தோலிக்கராவர். அங்லிக்கத் தேவாலயங்களையும் மற்றைய பிரதான நீரோட்டப் புரொட்டஸ்தாந்துத் தேவாலயங்களையும் சேர்ந்தோர் நகரங்களில் காணப்படுகின்றனர். ஏழாம் நாள் அட்வென்டிஸ்ட்கள், ஜெஹோவாவின் சாட்சிகள், மெதடிஸ்ட்கள், பப்டிஸ்ட்கள், ஒல்லாந்தச் சீர்த்திருத்தத் தேவாலயத்தைச் சேர்ந்தோர்கள், அங்லிக்கன்கள், பென்டிகோஸ்ட்கள், அஸெம்ப்ளீஸ் ஒ.்.ப் கோட் என்ற பிரிவைச் சேர்ந்தோரும் காணப்படுகின்றார்கள். சமயம் பரப்பும் கிறிஸ்தவக் குழுக்கள், அண்மை ஆண்டுகளில் வளர்ச்சியுற்றுள்ள போதிலும் அவற்றினுடைய அங்கத்தவர்கள் இன்னும் மிகச் சிறு தொகையினராகவே இருக்கிறார்கள்.

## பிரிவு II: மதச் சுதந்திர அந்தஸ்தின் நிலை

### சட்ட / கொள்கைச் சட்டகம்

அரசியல் யாப்பு, பௌத்த சமயத்திற்குத் 'தலையா இட'த்தை வழங்கியுள்ளது. ஆனால், ஏனைய சமயக் குழுக்களின் உறுப்பினர்கள் தத்தமது சமயங்களைச் சுயாதீனமாகப் பின்பற்றுவதற்குப் பெற்றுள்ள உரிமைக்கும் அது இடமளிக்கின்றது. சமய விவகார அமைச்சு, நான்கு திணைக்களங்களைக் கொண்டுள்ளது. இவை, பௌத்த மத, இந்து மத, இஸ்லாமிய மத, கிறிஸ்தவ மத விவகாரங்களைக் கையாளுகின்றன. இவற்றின் ஆணைகளை வரைவிலக்கணப்படுத்தும் சட்டவாக்கங்களின் பிரகாரம், ஒவ்வொரு திணைக்களமும், சமூகத்தில் சமய விழுமியங்களைப் பதியச் செய்து, நற்பண்புகளைக் கொண்ட சமூகத்தை முன்னேற்றும் விதத்தில் நிகழ்ச்சித் திட்டங்களை உருவாக்கிச் செயற்படுத்த வேண்டும்.

2004 ஆம் ஆண்டு மே மாதத்தில், ஜாதிக ஹெல உருமய, 'கட்டாய மதமாற்றங்களைத் தடை செய்தல்' என்ற சட்டமூலத்தைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தது. 'நன்நெறிசாராத' மதமாற்றம் சம்பந்தமாகக் குற்றவாளியாகக் காணப்பட்ட எந்த ஒருவருக்கும், நன்நெறிசாராத மதமாற்றத்திற்கு உதவிய எந்த ஒருவருக்கும், தண்டப் பணம், சிறைத் தண்டனை என்பன உட்பட்ட, தண்டனைகளை இச்சட்டமூலம் உள்ளடக்கியுள்ளது. பெண்களையும் பிள்ளைகளையும் மதமாற்றினால், தண்டனைகள் மேலும் கடுமையானவையாக அமையும். 2004 ஆம் ஆண்டு, ஓகஸ்ட் மாதம், சட்டமூலத்திலுள்ள சில பிரதான பகுதிகள், அரசியல் யாப்பிற்கு முரணாக உள்ளனவென்று உச்ச நீதிமன்றம் கூறியது. ஆனாலும், கட்டாயமாக மதம் மாற்றுதல், வஞ்சித்து மதம் மாற்றுதல் அல்லது 'கவர்தல்' மூலம் மதம் மாற்றுதல் என்பவற்றைக் குற்றங்களாகக் காட்டும் பிரிவுகளை உச்ச நீதி மன்றம் ஆதரித்து நிலைநிறுத்தியது. 2005 ஆம் ஆண்டு, மே மாதம் 6 ஆந் திகதி, ஜாதிக ஹெல உருமய, எந்தவிதத் திருத்தங்களையும் செய்யாமல், அச்சட்டமூலத்தை, இரண்டாவது வாசிப்பிற்காகச் சமர்ப்பித்தது. இச்சட்டமூலம், மீளாய்விற்காகப் பாராளுமன்ற நிலைக்குழுவிற்கு அனுப்பப்பட்டது. இந்நிலைக்குழு அமைக்கப்பட்ட தினத்திலிருந்து, இச்சட்டமூலத்தை கவனத்திற்கெடுப்பதற்கும், அதற்கான திருத்தங்களை முன்மொழிவதற்கும் நிலைக்குழுவிற்கு ஆறு மாத அவகாசம் வழங்கப்பட்டது. 2006 ஆம் ஆண்டு, ஏப்ரில் மாதத்தில் பாராளுமன்ற சபாநாயகர், நிலைக்குழுவின் உறுப்பினர்களை நியமித்தார். இக்குழுவில், ஏழு பௌத்தர்களும் ஆறு கிறிஸ்தவர்களும், ஐந்து இந்துக்களும் இரண்டு முஸ்லிங்களும் இடம் பெற்றார்கள். அறிக்கை உள்ளடக்கும் கால இறுதியில், குழு, தொடர்ந்தும் சமயத் தலைவர்களிடமிருந்தும் குடியியற் சமூகத் தலைவர்களிடமிருந்தும் சான்றுரைகளைச் செவிமடுத்த வண்ணம் இருந்தது.

பௌத்தம், அரசியல் யாப்புச்சார் முன்னுரிமையைப் பெற்றிருந்த போதிலும், ஏனைய மதங்களின் பிரதான சமய விழாக்கள் பல, தேசிய விடுமுறைகளாக உள்ளன. இந்து சமயத்தவரின் பண்டிகைகளான தைப்பொங்கல், புது வருடப் பிறப்பு, தீபாவளி என்பனவும் இஸ்லாமிய சமயத்தவரின் பண்டிகைகளான ஹஜ்ஜி, ரம்ஸான், தீர்க்கதரிசி முகம்மது நபியின் பிறந்த தினம் என்பனவும் கிறிஸ்தவ சமயத்தவரின் பண்டிகைகளான பெரிய வெள்ளி, நத்தார் என்பனவும் இவ்விடுமுறைகளுள் அடங்கும்.

கிறிஸ்தவ மதப் பிரிவுகளுட் சில, தமது விவகாரங்களில் அதிகரித்த அளவில் அரசாங்கம் ஈடுபடுவதை எதிர்த்தன. இதன் பயனாக, பாராளுமன்ற அதிகாரச் சட்டங்களினூடாக அல்லது உள் நாட்டுச் சட்டங்களின் கீழ், கூட்டுரிமைக் குழுமங்களாகப் பதிவு செய்வதற்கு இவற்றிற்கு அனுமதி வழங்கப்பட்டது. கூட்டுரிமைக் குழுமமாகத் தன்னைப் பதிவு செய்துகொள்ள விரும்பும் எந்தவொரு சமயக் குழுவும், அவ்வாறு செய்வதற்குப் படிமங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். நிதிக் கொடுக்கல் வாங்கல்களிலும், காணி சம்பந்தப்பட்ட விவகாரங்களிலும் கூட்டுரிமைக் குழுமமாக நிற்கும் தன்மையை இத்தகைய பதிவு குழுவிற்கு வழங்கும். சமய

அமையங்களுக்கென வரி விலக்கு எதுவும் இல்லை. எனினும், தேவாலயங்களும் கோவில்களும் தர்ம அமையங்களாகத் தம்மைப் பதிவு செய்துகொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது. தர்ம அமையங்கள் என்ற விதத்தில் அவற்றிற்குச் சில வரி விலக்குகள் உண்டு. 'சமயக் குழு' என்று பதிவு செய்யும் தெரிவு இவற்றிற்கு இல்லை.

அரசாங்கப் பாடசாலைக் கலைத்திட்டத்தில், சமயம் ஒரு கட்டாய பாடமாகும். பௌத்தம், இஸ்லாம், இந்து சமயம், கிறிஸ்தவம் என்பவற்றுள் பெற்றோரும் பிள்ளைகளும் ஒன்றைத் தெரிவு செய்யலாம். மற்றைய மதங்களைப் பற்றிக் கற்பிக்கப்படாததால், ஏனைய சமயக் குழுக்களைச் சேர்ந்த மாணாக்கர்கள், அரசாங்கப் பாடசாலை முறைமைக்கு வெளியில் சமயக் கல்வியைக் கற்கலாம். நூல் கல்வியை நோக்கமாகக் கொண்டே பாடசாலைகள் மதக் கல்வியைக் கற்பிக்கின்றன. அரசாங்கத்தினால் நடத்தப்படும் தேசியப் பரீட்சைகளுக்கே சகல பிள்ளைகளும் தோற்ற வேண்டும் என்பதனால், பெரும்பாலான தனியார் பாடசாலைகள், அரசாங்கப் பாடசாலைகள் கற்பிக்கும் கலைத்திட்டத்தை ஒத்த கலைத்திட்டத்தையே பின்பற்றுகின்றன.

சம்பந்தப்பட்ட இனக்குழு அல்லது சமயக் குழுவின் வழக்கச் சட்டங்களுக்கமையவே, விவாகரத்து, பிள்ளைக் கட்டுக்காப்பு, மரபுரிமை என்பன உட்படக் குடும்பச் சட்டங்களுடன் தொடர்புற்ற விஷயங்களுக்கு நீதி வழங்கப்படுகின்றது. பெண்கள் விவாகஞ் செய்யக்கூடிய ஆகக் குறைந்த வயது 18 ஆகும். பூப்பெய்தியதும், பெண்கள் விவாகஞ் செய்யும் வயதை எய்திவிட்டார்கள் என்ற வழக்கஞ்சார்ந்த சமய நடைமுறைகளைத் தொடர்ந்தும் பின்பற்றும் முஸ்லிம்களுக்கு 18 வயதெல்லை பொருந்தாது. இஸ்லாமிய வழக்கத்தின் படி, குடும்பத்தை நிதிரீதியாகக் கொண்டுநடத்தும் ஆற்றலைப் பெற்றதும் ஆண்கள் விவாகஞ் செய்யலாம்.

ஒரு, சமய அல்லது இனக்குழுவில் அங்கத்துவம் வகிப்பதை அடிப்படையாகக்கொண்ட, வெவ்வேறு சட்ட நடைமுறைகளைப் பிரயோகித்தல், பெண்களுக்கெதிராகப் பாரபட்சம் காட்டுவதற்கு வழிவகுக்கக்கூடும்.

## மதச் சுதந்திரம் தொடர்பான கட்டுப்பாடுகள்

வெளி நாட்டு மதகுருமார், நாட்டில் செயற்படலாம். ஆனால், கடந்த மூன்று தசாப்தங்களில், வேலை செய்வதற்கான தற்காலிக அனுமதிச்சீட்டுக்களை வழங்குவதை அரசாங்கம் வரையறுத்துள்ளது. அராசங்கத்துடன் முறைசார் விதத்தில் அரசாங்கத்தில் பதிவு செய்து கொண்ட மதப் பிரிவுகளுக்கு மட்டுமே, பொதுவாக, வேலை செய்வதற்கான அனுமதி வழங்கப்பட்டது. சமயப் பணியில் ஈடுபட்டுள்ள பெரும்பாலானோர் சுதேச மக்களேயாவர்.

வெளி நாட்டுச் சமய ஊழியர்களுக்கு வழங்கப்படும் தற்காலிக வதிவு அனுமதிச் சீட்டின் எண்ணிக்கையை அரசாங்கம் வரையறுத்துள்ளது.

## மதச் சுதந்திரத்தைத் தவறாகப் பயன்படுத்துதல்

இலங்கையில் வாழும் தமிழ்ச் சிறுபான்மையினருக்குத் தனி நாடு கோரிப் போரிடும் ஒரு பயங்கரவாத இயக்கமாகிய, தமிழீழ விடுதலைப் புலிகளுக்கெதிராக, 1983 ஆம் ஆண்டு முதல் அரசாங்கம் போரிட்டுவந்துள்ளது. 2001 ஆம் ஆண்டில், அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளின் இயக்கமும் ஒருதலையான யுத்த நிறுத்தத்தை அறிவித்தன. 2002 ஆம் ஆண்டில், இவை இரண்டும் கூட்டுப் போர் நிறுத்த உடன்படிக்கை ஒன்றிற்கு இணங்கின. வன்முறையில் அதிகரிப்பு ஏற்பட்டதுடன், 2005 ஆம் ஆண்டின் இறுதியில் சமாதானச் செயன்முறையில் தாமதம் ஏற்பட்டது. 2006 ஆம் ஆண்டில், இரு தரப்பினருக்கிடையிலும் புதுப்பிக்கப்பட்ட போர் மூண்டது. மோதல்கள், மொழி, இன, அரசியல் வேறுபாடுகளை அடிப்படையாகக் கொண்டிருந்ததால், இம்மோதல்களில் சமயம் குறிப்பிடத்தக்களவு பங்கு வகிக்கவில்லை. பௌத்தர்கள், இந்துக்கள், இஸ்லாமியர், கிறிஸ்தவர்கள் என்ற யாவரும் மோதல்களினால் பாதிக்கப்பட்டனர். 1983 ஆம் ஆண்டு முதல் இம்மோதல்கள் 60,000 இற்கும் மேற்பட்ட உயிர்களைப் பலிகொண்டுள்ளது. பாரிய இராணுவச் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு முன்னர், அரசாங்க வானொலியின் மூலம் இராணுவம், குடிமக்களுக்கு எச்சரிக்கைகளை விடுத்து, பாதுகாப்பான வலயங்களிலுள்ள தேவாலயங்களிலும் கோவில்களிலும் கூடுமாறு, அறிவுறுத்தல்களை வழங்கியது. இராணுவத்தினரும் அரசாங்கத் துணைப் படைகளும் தமிழ்ப் புலிகளும், மோதல்களில் சமய வசதிகளை ஈடுபடுத்துவதாக, அல்லது மோதல் பிரதேசங்களில் 'ஷெல்' தாக்குதல்களை மேற்கொள்வதன் மூலம் அவைகளை அபாயத்திற்குள்ளாக்குவதாகக் குற்றஞ்சாட்டப் பட்டுள்ளனர்.

அறிக்கைக்குட்பட்ட காலப்பகுதியில், வடக்கிலும் கிழக்கிலும் உள்ள வழிபாட்டுத் தலங்களில், தனிப்பட்டவர்களுக்கெதிராக, மனித உரிமைத் துஷ்பிரயோகங்கள் இடம்பெற்றுள்ளன. இச்சம்பவங்கள், சமய சுதந்திரத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்திய போதிலும், இத்துஷ்பிரயோகங்கள், சமய அடிப்படையில் தூண்டப்படவில்லை. எதிர்மாறாக, இவை, மோதல் நிலைமையின் ஒரு விளைவேயாகும்.

2007ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் 13ஆந் திகதி, யாழ்ப்பாணத் தமிழ் மிஷன் தேவாலயத்தைச் சேர்ந்த வண. நல்லதம்பி குணசீலன், அரசாங்கப் பாதுகாப்புப் படைகளினால் சுட்டுக்கொல்லப்பட்டார். பாதுகாப்பு ஆளணியினர், இறந்த மத குழுவின் பிபிலிய நூல், பை, மோட்டார் சைக்கிள் என்பவற்றை அபகரித்தனர். மதகுரு, விரத, பிரார்த்தனை நிகழ்ச்சியொன்றைத் தனது தேவாலயத்தில் நடத்துவதற்காகச் சென்றுகொண்டிருந்ததாக, வழிபாட்டாளர்கள் திடமாகக் கூறியபோதிலும், மதகுரு, பாதுகாப்புப் படையினர் மீது கைக்குண்டு ஒன்றை வீச முயன்றதாக அரசாங்க அலுவலர்கள் கூறினார்கள். இக்கொலை, சமய ரீதியாகத் தூண்டப்பட்ட ஒன்று என்று கூறுவதற்கு ஆதாரம் இல்லை.

2006ஆம் ஆண்டு முழுவதிலும், மோதல்கள் காரணமாகக் காணாமற்போனோர் பற்றி அறிவிக்கப்பட்ட தொகையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. மனிதாபிமானப் பிரச்சினைகளைப் பற்றிப் பேசிய, சில கத்தோலிக்க மதகுருமாரும் காணாமற் போனோருள் அடங்குவர். 2006 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 20 ஆந் திகதி, பிதா திருச்செல்வம் நிஹல் ஜிம் ப்ரௌனும் அவருடைய உதவியாளர் வென்ஸெஸ்லோஸ் வின்ஸெஸ் விமலதாஸும், யாழ்ப்பாணக் குடா நாட்டிற்கு அப்பால், பிரதானமாகக் கத்தோலிக்கர் வாழும் ஊர்காவற்துறை என்ற தீவிலுள்ள அலைப்பிட்டிக் கிராமத்தின் அருகில், பாதுகாப்புப் படையினரின் சோதனைச் சாவடியிலிருந்து ஆயுதமேந்திய ஆறு பேர், அவர்களைத் தொடர்ந்து சென்ற பின்னர், காணாமற் போனார்கள். 2006 ஆம் ஆண்டு, ஓகஸ்ட் மாதம் 13ஆந் திகதி, கடற்படைக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் துப்பாக்கிச்சண்டை வெடித்த போது, பிதா பிரௌன், அர்ச். ∴பிலிப் நேரி தேவாலயத்தில் இருந்தார். இச்சண்டையில் 15 குடிமக்கள் இறந்தனர்; குறைந்தது 54 பேர் காயமடைந்தனர். சிரேஷ்ட கடற்படை ஆளணியினரிடமிருந்து இவருக்கு மரண அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டன என்று மனித உரிமைகள் அவதானிப்பு, கூறியது. கொழும்பில், ராகமை அரசாங்க வைத்தியசாலையில் பூர்த்தி செய்யப்பட்ட மரபணு (DNA) சோதனையின் படி, 2007 ஆம் ஆண்டு, மார்ச் 14 ஆந் திகதி, புங்குடுதீவின் அருகில், இராணுவ மண் சாக்கில் கண்டெடுக்கப்பட்ட நடு உடற் பகுதியொன்று, பிதா பிரௌனினுடையதென உள்;ர் அச்சுலகு அறிவித்தது. எனினும், மரபணுச் சோதனை, அந்த உடல் பிதா பிரௌனினுடையதல்ல என்பதை நிச்சயப்படுத்தியுள்ளதென, 2007 ஆம் ஆண்டு, ஜூன் மாதத்தில், வெளி நாட்டு விவகாரங்கள் அமைச்சுக் கூறியது. இக்கொலை, சமய ரீதியாகத் தூண்டப்பட்ட ஒன்று என்று கூறுவதற்கு ஆதாரம் இல்லை.

அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடந்த துப்பாக்கி மோதலின் போது, பேசாலையிலுள்ள வெற்றி மாதா தேவாலயத்தில் சரண் புகுந்த, கிறிஸ்தவத் தமிழர்களும் இந்துத் தமிழர்களும் உட்பட நூற்றுக்கணக்கான குடிமக்களை, 2006ஆம் ஆண்டு, ஜூன் மாதம், 14ஆந் திகதி, அரசாங்கப் படைகள் தாக்கி, துப்பாக்கிகளால் சுட்டனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

2006 ஆம் ஆண்டு, மே மாதம் 6 ஆந் திகதி, எட்டு தமிழ் ஆண்கள், வடக்கில், ஓர் இந்துக் கோவிலிலிருந்து கடத்திச்செல்லப்பட்டனர். இச்சம்பவமும் அரசியலினால் தூண்டப்பட்டதென்ற சாத்தியப்பாடு உண்டு. சமயத் திருவிழா ஒன்றிற்காக இவர்கள் கோவிலைச் சோடித்துக்கொண்டிருந்தார்கள். இவர்களைக் காணவில்லை என்று 2006 ஆம் ஆண்டு, மே மாதம் 7 ஆந் திகதி அறிவிக்கப்பட்டது. இவ்வறிக்கை உள்ளடக்கும் காலப் பகுதி முடிவடையும் போது, கடத்திச்செல்லப்பட்ட அவர்கள் எங்குள்ளார்கள் என்பது பற்றி எதுவும் தெரிய வரவில்லை. மே மாதம் 7 ஆந் திகதி விடியற் காலையிலிருந்து, இராணுவப்படையினர் கோவிலில் காணப்பட்டனரென்றும், இந்த எட்டுப் பேரையும் இராணுவத்தினர் அழைத்துச் செல்வதைத் தாம் கண்டனரென்றும் சம்பவத்தை நேரில் கண்டவர்கள் கூறினார்கள். கடத்திச் செல்லப்பட்ட எட்டுப் பேர்களினதும் நெருங்கிய உறவினர்கள், யாழ்ப்பாணத்திலுள்ள மனித உரிமைகள் ஆணையம், நீதிமுறைக்குப் புறம்பான கொலைகளுக்கான ஐக்கிய நாடுகளின் விசேஷ தொடர்பாளர், சர்வதேச மன்னிப்புச் சபை என்பவற்றில் முறையீடுகளைப் பதிவு செய்த போதிலும் எவ்விதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

2005 ஆம் ஆண்டு, டிசெம்பர் மாதம் 24 ஆம் திகதி, பாராளுமன்ற அங்கத்தவரும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குச் சார்பான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்தவரும், கிறிஸ்தவருமாகிய ஜோச∴ப் பரராஜசிங்கம் கிழக்கில், மட்டக்களப்பில் தேவாலயம் ஒன்றில் நள்ளிரவு வழிபாட்டில் ஈடுபட்டிருந்த போது படுகொலை செய்யப்பட்டார். இவருடைய கொலை அரசியல்ரீதியான தூண்டுதலின் பேரில் மேற்கொள்ளப்பட்டதென்று கருதப்படுகின்றது.

கிறிஸ்தவர்களுக்கு எதிரான பல தாக்குதற் சம்பவங்களும் தொல்லை கொடுக்கும் சம்பவங்களும் பற்றி பொலீஸிற்கு முறைப்பாடு செய்யப்பட்ட போது, அவற்றைப் பொலீஸார் புலன் விசாரணை செய்தனர். சில சமயங்களில் குற்றவாளிகளெனச் சந்தேகிக்கப்பட்டவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை முன்னெடுத்துச்செல்ல பொலீஸார் தயங்கினர். இவ்வாறு சந்தேகிக்கப்பட்டவர்களுள் சிலர் பௌத்த பிக்குகளாவர். பெரும்பாலான தாக்குதல்கள், சிறு தொகையிலமைந்துள்ள தீவிர பௌத்தர்களினால் நடத்தப்பட்டனவென்று சட்டத்தைச் செயற்படுத்தும் அலுவலர்கள் நம்புகின்றார்கள்.

2003 ஆம் ஆண்டில், இலங்கை பென்டிகோஸ்ட் மிஷனின் அங்கத்தவரான சகோதரர் மனோகரன், பதினொரு வயதுச் சிறுமியின் மரணம் தொடர்பாகக் கைது செய்யப்பட்டார். சுகவீனமுற்றிருந்த இச்சிறுமிக்காக, சகோதரர் மனோகரன் பிரார்த்தனை செய்தார். மனிதக் கொலைக்குச் சமமான ‘குற்றமுடைய மரணம்’ என்ற குற்றச்சாட்டின் பேரில், இவர், சிறுமியின் பெற்றோர்களுடன் பொலீஸ் கட்டுக்காப்பிற்குள் வைக்கப்பட்டார். 2006 ஆம் ஆண்டு, ஜூன் மாதம் 2 ஆந் திகதி இம்மூவரும் பிணையில் விடுவிக்கப்பட்டனர். 2006 ஆம் ஆண்டு, ஜூலை மாதம் 28 ஆந் திகதி வழக்குக் கேட்டல் இடம்பெறும் என்று கூறப்பட்டது. சகோதரர் மனோகரன், 2006 ஆம் ஆண்டு, நொவெம்பர் மாதத்தில் இயற்கைக் காரணங்களினால் இறந்தார். பிரதேச நீதிவான் மன்றம் வழக்கைப் பிற்போட்டது. இறந்த பிள்ளையின் பெற்றோர்களுக்கெதிராக, சட்டத்துறைத் தலைமை அதிபதி குற்றச்சாட்டுக் களைப் பதிவு செய்யவில்லை.

கொழும்புப் புறநகர்ப் பகுதியிலுள்ள மகரகமையில், கொடகமைப் பிரார்த்தனை மையத்தின் பாதிரியார், அங்கு நடந்த பிரார்த்தனைகளை நிறுத்தும் படி, பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு பௌத்த பிக்குவினாலும் அவருடைய தலைமையில் வந்த கும்பலினாலும், 2006 ஆம் ஆண்டு மே மாதத்தில் அச்சுறுத்தப்பட்டார். பாதிரியார், பொலீஸாரிடம் சென்றபோது, பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் விரும்பாவிட்டால், பிரார்த்தனைகளை நிறுத்த வேண்டுமென்று அவரிடம் கூறப்பட்டது.

சமயக் கைதிகள் அல்லது தடுத்து வைக்கப்பட்டோர் பற்றிய அறிவித்தல்கள் எதுவும் காணப்படவில்லை.

**கட்டாய மதமாற்றம்**

ஐக்கிய அமெரிக்காவிலிருந்து கடத்தப்பட்ட அல்லது, சட்ட விரோதமாக அழைத்துச் செல்லப்பட்ட பிராயமடையாத ஐக்கிய அமெரிக்கப் பிரஜைகள் அல்லது, அத்தகைய பிரஜைகளை ஐக்கிய அமெரிக்காவிற்குத் திருப்பி அனுப்பவதற்கு அனுமதி மறுக்கப்பட்ட பிரஜைகள் உட்பட, கட்டாய மதமாற்றம் எதுவும் அறிவிக்கப்படவில்லை.

**பயங்கரவாத அமையங்களினால் துன்புறுத்தப்படுதல்**

தமிழீழ விடுதலைப் புலிகளின் இயக்கம் வெளி நாட்டுப் பயங்கரவாத அமையமாகுமென்று, 1997 ஆம் ஆண்டு முதல் ஐக்கிய அமெரிக்காவினால் பட்டியற்படுத்தப்பட்டுள்ளது. முஸ்லிங்களும் இந்துக்களும் பௌத்தர்களும் கிறிஸ்தவர்களும் தமிழீழ விடுதலைப் புலிகளினால் பழிவாங்கப்பட்டுள்ளார்களெனினும் சமய அடிப்படைத் துன்புறுத்தல்கள், மோதலில் முக்கிய பங்கு வகிக்கவில்லை.

1990 ஆம் ஆண்டில், தமிழீழ விடுதலைப் புலிகள், நாட்டின் வடக்கில் வாழ்ந்த, கிட்டத்தட்ட 46,000 முஸ்லிம் மக்களை - ஏறத்தாழ, முழு முஸ்லிம் மக்களையும் - அவர்களின் வீடுகளிலிருந்து வெளியேற்றினார்கள். இவர்களுள் பெரும்பாலானோர், இடம்பெயர்ந்தோராக இருந்தனர்; இவர்கள் நலன்புரி மையங்களில் அல்லது நலன்புரி மையங்களுக்குச் சமீபத்தில் வாழ்ந்துவந்தனர். 1997ஆம் ஆண்டில், சில முஸ்லிங்கள் வடக்கிலுள்ள நகரமான யாழ்ப்பாணத்திற்குத் திரும்பியபோதிலும், தமிழீழ விடுதலைப் புலிகளின் தொடர்ச்சியான அச்சுறுத்தலினால் அவர்கள் அங்கு தங்கவில்லை. மன்னார் பிரதேசத்தில் இடம்பெயர்ந்த ஆயிரக் கணக்கான முஸ்லிம்கள், மோதல்கள் முடிவுக்கு வரும் வரையும் தமது வீடுகளுக்குத் திரும்பக்கூடாதென்று, தமிழீழ விடுதலைப் புலிகளினால் எச்சரிக்கப்பட்டனரென்று நம்பத்தகுந்த அறிவிப்புக்கள் காணப்பட்டன. தமிழீழ விடுதலைப் புலிகளின் முஸ்லிம்களுக்கெதிரான செய்கைகளுக்கு முஸ்லிம்களின் சமய நம்பிக்கைகள் காரணம் அல்ல என்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் அனுதாபிகளாக இல்லாதவர்களை, வடக்கிலிருந்தும், கிழக்கிலிருந்தும் அப்புறப்படுத்தும் முற்றுமுழுதான தந்திரோபாயத்தின் ஓர் அம்சமாக அவர்கள் அமைந்தார்கள் என்றும் தோன்றுகின்றது. தமிழீழ விடுதலைப் புலிகள், இணக்கப்பாடான சில அறிக்கைகளை முஸ்லிம்களுக்கு விடுத்தபோதிலும், அக்கூற்றுக்களை முஸ்லிம்கள் ஐயத்துடனேயே

நோக்கினார்கள். உள் நாட்டில், சில பிரதேசங்களில் இடம்பெயர்ந்த முஸ்லிம்களைத் தத்தமது வீடுகளுக்குத் திரும்பும்படியும் அவர்களுக்குத் தீங்கு விளைவிக்கப்பட மாட்டாதென்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் முஸ்லிம்களை ஊக்குவித்து வந்தனர்.

உள்ளூரில் இடம்பெயர்ந்த சில முஸ்லிம்கள் தமது வீடுகளுக்குத் திரும்பியபோதிலும் மிகப் பெரும்பாலானோர் திரும்பவில்லை. அதற்குப் பதிலாக, தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழிருந்த பிரதேசங்களில் பாதுகாப்பை அரசாங்கம் உத்தரவாதப்படுத்தும் வரை அவர்கள் காத்திருந்தனர். 2002 ஆம் ஆண்டுப் போர் நிறுத்த உடன்படிக்கையின் பின்னர், தமிழீழ விடுதலைப் புலிகள் கிழக்கில் பல தாக்குதல்களை மேற்கொண்டனர்; இத்தாக்குதல்களில் முஸ்லிம்களும் கொல்லப்பட்டனர். இந்த அறிக்கை உள்ளடக்கும் காலப்பகுதியின் இறுதி வரை, இச்சம்பவங்கள் தொடர்பாக எவ்விதக் கைதுக்களும் இடம்பெறவில்லை.

கிழக்கில், மட்டக்களப்பில் வாழ்ந்த, இந்து சமயக் குருவாகிய செல்லையா பரமேஸ்வரக் குருக்கள், அவருடைய வீட்டிலிருந்து அழைத்துச் செல்லப்பட்டு, கொல்லப்பட்ட செய்தி, 2007 ஆம் ஆண்டு, ஃபெப்ரவரி மாதம் பி.பி.ஸியில் ஒலிபரப்பப்பட்டது. இதற்கு ஒரு சில நாட்களுக்கு முன்னர் தான், இவர், ஜனாதிபதி ராஜபக்ஷவை வாகரையில் சந்தித்து, இந்து சமய மரபின்படி நடந்த சடங்கில் அவரை வாழ்த்தினார். வாகரையில், தமிழீழ விடுதலைப் புலிகளின் படைகள் இராணுவத்தினால் தோற்கடிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அரசாங்கப் பாதுகாப்புப் படைகள், ஜனாதிபதியை வரவேற்பதற்காகப் பரமேஸ்வரக் குருக்களை வாகரைக்கு அழைத்துச் சென்றனர். அவருடைய இறப்பிற்கு, தமிழீழ விடுதலைப் புலிகளே காரணம் என்று சந்தேகிக்கப்பட்டது. இந்தக் கொலை மதரீதியாகத் தூண்டப்பட்ட ஒன்று என்று கருதுவதற்கு ஆதாரங்கள் இல்லை.

கிழக்கு மாகாணத்தில், திருகோணமலையில், பொதுக் காணியில், புத்தர் சிலையொன்று வைக்கப்பட்டமை தொடர்பாக, 2005 ஆம் ஆண்டு, மே மாதம் 17 ஆந் திகதி, தமிழீழ விடுதலைப் புலிகளின் அனுசரணையில் இடம்பெற்ற வேலை நிறுத்தத்தில், ஒரு சிங்கள இளைஞர் கொல்லப்பட்டார். கைக்குண்டொன்று எறியப்பட்ட போது, ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு உறுப்பினர்கள் காயத்திற்குள்ளானார்கள். 2005 ஆம் ஆண்டு, மே மாதம் 18 ஆந் திகதி, புத்தர் சிலையை அகற்றும்படி, திருகோணமலை நீதிவான் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கினார். 2005 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 17 ஆந் திகதி, கொழும்பிலுள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம், அந்த ஆணையை இடைநிறுத்தஞ் செய்தது. 2006 ஆம் ஆண்டு, ஏப்ரில் மாதம் 7 ஆந் திகதி, இனந்தெரியாத ஒரு துப்பாக்கி நபர், புத்தர் சிலை தொடர்பாகத் தமிழீழ விடுதலைப் புலிகளின் அனுசரணையில் நடந்த வேலை நிறுத்தத்தின் ஒழுங்கமைப்பாளரான விக்னேஸ்வரனைக் கொன்றார். இக்கொலைக்கான காரணங்கள் தெரியவில்லை. இவ்வறிக்கை உள்ளடக்கும் காலப்பகுதியின் இறுதியில், கேள்விக்குரிய இடத்திலேயே அச்சிலை தொடர்ந்தும் இருந்தது.

மட்டக்களப்பில், ஆரயம்பதியிலுள்ள அன்னபூரணி இந்துக் கோயிலின் பிரதான குருக்கள் கோயிலின் சமய நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தபோது, 2005 ஆம் ஆண்டு, ஏப்ரில் மாதம் 24 ஆந் திகதி ஆயுதமேந்திய தமிழீழ விடுதலைப் புலிகளின் கும்பலினால் சுடப்பட்டார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. குருக்களும் இன்னும் இரண்டு பேரும் படுகாயங்களுடன் மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்கள். இந்த அறிக்கை உள்ளடக்கும் காலப்பகுதியில், பொலீஸ் புலன் விசாரணைகளைத் தொடர்ந்து நடத்திக்கொண்டிருந்தது. ஆனால், இப்பிரதேசம், தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் இருப்பதால், வேறெந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

போர் நடவடிக்கைகள் இடம்பெறும் சந்தர்ப்பத்தில், வந்து கூடும்படி, அரசாங்கத்தினால் மக்கள் அறிவுறுத்தப்பட்ட தேவாலய வளவுகளையும் கோயில் வளவுகளையும் ஆயுதங்களைக் களஞ்சியப்படுத்துவதற்குக் கேடயங்களாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் பயப்படுத்துவதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

### பிரிவு III: சமூகப்பாங்கான துஷ்பிரயோகங்களும் பாரபட்சங்களும்

சமய வேறுபாடுகளை அடிப்படையாகக்கொண்ட பாரபட்சங்கள், இன வேறுபாடுகளை அடிப்படையாகக் கொண்ட பாரபட்சங்களை விடப் பெரிதும் குறைவாக உள்ளன. பொதுவாக, பல்வேறு சமயங்களின் அங்கத்தவர்கள், மற்றைய சமய நம்பிக்கைகள் தொடர்பாக, சகிப்புத்தன்மையுள்ள போக்கைக் கொண்டுள்ளனர். மதமாற்றத்தை எதிர்க்கும் பௌத்தத் தீவிரவாதிகள் கிறிஸ்தவர்களுக்குத் தொல்லை கொடுப்பதும் அவர்களின் சொத்துக்களையும் வழிபாட்டு இடங்களையும் தாக்குவதும், இவ்வறிக்கை உள்ளடக்கும் காலப் பகுதியில் தொடர்ந்தும் இடம்பெற்றவாறிருந்தன. வெவ்வேறு மதங்களைச் சேர்ந்த சில தலைவர்கள், இத்தாக்குதல்களைப் பகிரங்கமாகக் கண்டித்துள்ளனர். இலங்கையில் பெரும்பான்மையினராக

உள்ள, சுனி இஸ்லாமிய சமுதாயத்தைச் சேர்ந்த சிலர், சிறுபான்மையாக உள்ள சில இஸ்லாமியச் சமயப் பிரிவுகளுக்கெதிராகப் பாரபட்சம் காட்டி, தொல்லைப்படுத்தி, அவர்களின் வழிபாட்டு இடங்களின் மீதும் தனிப்பட்டவர்களின் மீதும் அச்சுறுத்தல்களை விடுத்துள்ளனர். இக்குழுக்கள் கோரினால், பொதுவாக, பொலீஸ், அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்குகின்றது.

2007 ஆம் ஆண்டு, மே மாதம் 18 ஆந் திகதி, நீர்கொழும்பிலுள்ள அகமதியா முஸ்லிம் சமுதாயத்தின் பள்ளிவாசலைச் சுவீகரிக்கப்போவதாக சுனி முஸ்லிங்கள் விடுத்த அச்சுறுத்தல்களைத் தொடர்ந்து, அகமதியா முஸ்லிம் சமுதாயத்தினர் பொலீஸ் பாதுகாப்பை நாடினார்கள். அப்பள்ளிவாசலுக்கு பொலீஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டது. வெள்ளிக்கிழமைத் தொழுகை அசம்பாவிதங்கள் எதுவுமின்றி நடந்தேறியது.

2007 ஆம் ஆண்டு, மே மாதம் 11 ஆந் திகதி, சுனி முஸ்லிம் குழுவொன்று நீர்கொழும்பிலுள்ள அகமதி பள்ளிவாசலுக்கு வந்து, அங்கு தொழுகையை நடத்தி, அகமதி குழுவினர் பள்ளிவாசலுக்குள் பிரவேசிக்காத வண்ணம் தடுத்தனர். இச்சம்பவ இடத்தில் பொலீஸார் காணப்பட்டனர். ஆனால், பள்ளிவாசலுக்குள் இருந்த மக்களைக் கலையச் செய்வதற்குப் பலாத்காரத்தைப் பிரயோகிக்கத் தாம் விரும்பவில்லை என்று பொலீஸார் கூறினர்.

தாம், சமயக் கோட்பாடுகளுக்கடங்காதவர்கள் என்று தம் மீது குற்றஞ்சாட்டி, சிறுபான்மையினரான தமக்கு எவ்விதமான விளம்பரங்களும் அளிக்க வேண்டாமென்று அரசாங்க ஊடகங்களுக்கு சுனி குழு அறிவுறுத்தியதென, 2006 ஆம் ஆண்டு, ஒக்டோபர் மாதத்தில் அகமதிய சமுதாயம் அறிவித்தது. 2006 ஆம் ஆண்டு, ஒக்டோபர் மாதம் 14 ஆந் திகதி, தமது அங்கத்தவர்களுள் ஒருவரை, சுனி குழுவினர் கொலை செய்ததாகவும் ஒக்டோபர் மாதம் 9 ஆந் திகதி, நீர்கொழும்பில் பாக்கிஸ்தானைச் சேர்ந்த அகமதி முஸ்லிங்களை அவர்கள் வலிமையாகத் தாக்கியதாகவும், சுனி குழுவினருக்கெதிராக, அகமதியக் குழுவினர் முறைப்பாடுகளைப் பதிவு செய்தனர். இவ்வறிக்கைக்குட்பட்ட காலப்பகுதியில், பிரதேச பொலீஸார், இம்முறைப்பாடுகள் ஒன்றேனும் பற்றி எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்ட காலப்பகுதியில், கிறிஸ்தவத்தின் பிரதான நீரோட்டத்தைச் சேர்ந்த சமயக் கிளைகளும் சமயம் பரப்பும் குழுக்களும் சில சந்தர்ப்பங்களில் தொல்லைகளுக்கும் சொத்துக்கள் மீதும் வழிபாட்டு இடங்களின் மீதும் ஏற்படுத்தப்படும் தாக்குதல்களுக்கும் உள்ளாயின. இவை, தமக்கு அச்சுறுத்தலாக அமைகின்றனவென்று நம்பும் பிரதேசத்திலுள்ள சில பௌத்தர்களும் மதமாற்றத்தை எதிர்த்த சில பௌத்தர்களும் இத்தகைய செயல்களில் ஈடுபட்டனர். தம்மை இலக்காகக் கொண்டு தமக்கிழைக்கப்படும் தொல்லைகளையும் வன்செயல்களையும் அரசாங்கம் பொருட்படுத்தாது விடுகின்றதென்று, சில கிறிஸ்தவக் குழுக்கள் அவ்வப்போது முறைப்பாடு செய்துள்ளன. சில சமயங்களில், பொலீஸாரின் துலங்கள் போதியதாக அமையவில்லையென்றும் தாக்குதல்களில் ஈடுபட்ட தனிப்பட்டவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பதற்குப் பிரதேச பொலீஸ் அதிகாரிகள் தயங்கினர் என்று கூறப்படுகின்றது.

அறிக்கை உள்ளடக்கும் காலப்பகுதியில், கிறிஸ்தவ ஆலயங்கள், அமையங்கள் என்பன மீதும் சமயத் தலைவர்கள் அல்லது வழிபாட்டிற்காகக் கூடியிருந்தோர் மீதும் 39 தாக்குதல்கள் இடம்பெற்றனவென்றும், இவற்றுள் 90 சதவீதமானவை பொலீஸிற்கு அறிவிக்கப்பட்டனவென்றும் இலங்கை, மதம் பரப்பும் கிறிஸ்தவத் தேசிய சம்மேளனம் (NCEASL) கூறியது. இத்தாக்குதல்களுள் சிலவற்றை நம்பக்கூடிய வட்டாரங்கள் உறுதிசெய்தன.

கிறிஸ்தவர்கள், 'நன்நெறிசாராத' அல்லது கட்டாய மதமாற்றத்தில் ஈடுபடுதல் பற்றிய தீவிர பௌத்தர்களின் குற்றச்சாட்டுக்கள், இரு சமுதாயத்தினருக்கு இடையிலும் நெருக்கடி நிலை ஏற்படுவதற்குத் தொடர்ந்தும் ஒரு காரணமாக இருந்துவருகின்றது. கிறிஸ்தவர்கள், இக்குற்றச்சாட்டை மறுக்கின்றனர். மக்கள் தம் விருப்பத்தின் பேரிலேயே மதம் மாறுகின்றனர் என்று அவர்கள் கூறுகின்றார்கள். மதம் பரப்பும் செயல்களில் ஈடுபடும்போது, மதம் பரப்பும் குழுக்களின் சில அங்கத்தவர்கள், பௌத்தத்தை இழித்துரைக்கிறார்கள் என்று சில முறைப்பாடுகள் உள்ளன. கிறிஸ்தவர்கள், தீவிரமான மதமாற்றத்தில் ஈடுபடுகிறார்களென்றும், பொதுவாக வறுமை, போர், கல்வி இன்மை என்பன போன்ற சமூகக் கேடுகளைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்கிறார்கள் என்றும் சில குழுக்கள் குற்றஞ்சாட்டுகின்றன. தாம் மேற்கொள்ளும் நிவாரண முயற்சிகள், உதவி பெறுவோரை மதம் மாற்றுவதை நோக்கமாகக்கொள்ளவில்லை என்று கிறிஸ்தவர்கள் கூறுகிறார்கள்.

2007ஆம் ஆண்டு, ∴பெப்ரவரி மாதம் 11ஆந் திகதி, கொழும்பு மாவட்டத்தில் பண்டாரகமையிலுள்ள கிறிஸ்தவ மையத்தின் வழிபாட்டாளர்கள், ஞாயிறு காலை வழிபாட்டிற்காகக் கூடிய போது, அவர்கள் பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்த மண்டபத்தின் மீது,

இனந்தெரியாதவர்கள் கல் எறிய ஆரம்பித்தார்கள். கூரைத் தகடொன்று சேதத்திற்குள்ளாகியது. ஆனால், எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை. இதற்கு முன்னர், 2006ஆம் ஆண்டு, டிசெம்பர் மாதம் 10ஆந் திகதி, மண்டபத்தின் ஜன்னல்கள் உடைக்கப்பட்டு அழிக்கப்பட்டன. டிசெம்பர் மாதம் 24ஆந் திகதி கிறிஸ்தவத்திற்கெதிரான சுவரொட்டிகள் பிரதேசத்தில் காணப்பட்டன. தேவாலயத்தின் மீது பாறாங்கற்கள் வீசப்பட்டமை பற்றிய சம்பவம் பற்றி, தேவாலயம் பொலீஸில் முறைப்பாடொன்றைப் பதிவு செய்தது.

கிறிஸ்தவர்களை விரட்டுவதற்கான ஒரு கூட்டத்தில் கலந்துகொள்ளும்படி மக்களை அழைத்து, ஒலிபெருக்கிகளுடன் ஒரு வாகனத்தில் பயணஞ் செய்தோர் பற்றி, பொலன்னறுவை மாவட்டத்தில் பல பிரதேசங்களிலிருந்தும், 2007ஆம் ஆண்டு, ஃபெப்ரவரி மாதம் 9ஆந் திகதி, முறைப்பாடுகள் பெறப்பட்டன. இக்கூட்டம், வன்முறையில் முடியலாமென்று தாம் கவலையுற்றதாகப் பிரதேசத்தில் வாழ்ந்த கிறிஸ்தவர்கள் கூறினார்கள். திட்டமிடப்பட்டது போல், பொலன்னறுவைப் பட்டணப் பிரதேசத்திலுள்ள ஒரு பௌத்த கோவிலில் கூட்டம் நடத்தப்பட்டது. ஏறத்தாழ 150 பேர் இக்கூட்டத்தில் சமுகமளித்திருந்தனர். எந்தவொரு வன்முறையும் இடம்பெறாதென்பதை பொலீஸார் அங்கிருந்தமை உறுதிப்படுத்தியது. எனினும், பிராந்தியத்தில் கிறிஸ்தவச் செயற்பாடுகளை நிறுத்தும்படி, கிறிஸ்தவ குருமாருக்கு வலிமையாக அறிவுரை கூறுவதென கூட்டத்தில் பங்குபற்றியோர் முடிவு செய்தார்கள். அப்படிச் செய்யாவிட்டால், ‘விளைவுகளைச் சந்திக்க நேரிடுமென்றும், எதிர்ப்பை ஒழுங்கு செய்தோர் அவற்றிற்குப் பொறுப்பேற்க மாட்டார்கள்’ என்றும் கூறப்பட்டது.

மதத்தைப் புண்படுத்தக்கூடியனவென்று கூறப்படும் புத்தர் சிலைகளை நாட்டிற்குள் இறக்குமதி செய்வதற்கெதிராக, கொழும்பிலுள்ள பௌத்த கோவிலின் பிரதான குரு தொடுத்த, அடிப்படை உரிமை மீறல் பற்றிய மனு தொடர்பான முடிவைத் தாமதப்படுத்துவதென உச்ச நீதி மன்றம், 2007 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் தீர்மானித்தது. பொலீஸ் மா அதிபர், சுங்கப் பணிப்பாளர் நாயகம், சட்டத்துறைத் தலைமை அதிபதி, வெளி நாட்டு விவகார அமைச்சர் என்போரை, மனு, எதிர்வாதிகளாகக் காட்டியிருந்தது. மனு தொடர்பாகத் தான் எப்பொழுது விதிப்புச் செய்யும் என்பதை உச்ச நீதி மன்றம் குறிப்பிடவில்லை.

2006 ஆம் ஆண்டு, டிசெம்பர் மாதம் 17 ஆந் திகதியன்று ‘தேவ் நிவஸ’ (கடவுளின் இல்லம்) என்ற தேவாலயத்தின் பாதிரியார், பகுதி அளவில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த வீட்டில் நித்திரையாக இருந்தபோது, ஐந்து பேர் வீட்டை உடைத்துக்கொண்டு நுழைந்து அவரைத் தாக்கினார்கள். தாக்கியவர்கள் மின்சாரத் தொடர்பைத் துண்டித்தார்கள்; பாதிரியாரின் மோட்டார் சைக்கிளையும் ஏனைய உடைமைகளையும் சிதைத்தார்கள். அதன் பின்னர், அவர்கள், வீட்டிற்குத் தீயிட்டு, பாதிரியாரைப் பலவந்தமாக ஒரு வாகனத்திற்குள் ஏற்றினார்கள். வாகனத்தில் ஏற்றிச் சென்று, அவரை அடித்தார்கள்; திட்டினார்கள்; கிறிஸ்தவ சமயக் குழுப் பணிகளை நிறுத்தும்படி கூறினார்கள். குறிப்பிடத்தக்களவு தூரம் சென்ற பின்னர், அவர், வாகனத்திலிருந்து தூக்கி எறியப்பட்டார். 2006 ஆம் ஆண்டு, டிசெம்பர் மாதம் 18 ஆந் திகதி பாதிரியார் கோக்கரல்ல பொலீஸில் முறைப்பாடு செய்தார். இவ்வறிக்கை உள்ளடக்கும் காலப்பகுதியின் இறுதி வரை, பொலீஸார் எவரையும் கைது செய்யவில்லை. அடிக்கப்பட்டதன் விளைவாக, தனது பார்வை பாதிக்கப்பட்டுள்ளதால் தான் அல்லலுக்குள்ளாகி இருப்பதாக, பாதிரியார் கூறுகின்றார்.

அகில இலங்கை தரிக்கத்துல் முஃபிஹீன் (AITM) எனப்படும் சூஃபி முஸ்லிம் சமயப் பிரிவின் தலைவரான எம். எஸ். அப்துள்ளா பயில்வானின் நல்லடக்கம், ஒரு பள்ளிவாசலில் 2006ஆம் ஆண்டு, டிசெம்பர் மாதம் 7ஆந் திகதி இடம் பெற்றதும், மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள காத்தான்குடியில், ஏனைய முஸ்லிம் சமயப் பிரிவுகளுடன் இடம்பெற்ற வன்முறையுடன் கூடிய மோதல்கள் ஒன்பது நாட்கள் வரை நீடித்தன. மரபுசாரா சமய நடைமுறைகளைப் போதித்ததாலும் பல தெய்வ வழிபாட்டை மேம்படுத்த முயற்சி செய்ததாலும் இறந்த தலைவர் மீது ‘முர்த்தத்’ (முஸ்லிம் அல்லாதவர்) என்ற ஆணையைப் பிறப்பித்ததாகவும் காத்தான்குடி ஜமியத்துல் உலேமா (இறை இயல் சபை), கூறியது. பயில்வானின் நல்லடக்கம் பற்றிய விசாரணைகளை நடத்திய ஒரு முஸ்லிம் நீதிபதி, அவருடைய சடலம் அகழ்ந்தெடுக்கப்பட்டு, பொது முஸ்லிம் மையவாடியில் அடக்கஞ் செய்யப்பட வேண்டுமென்று உத்தரவிட்டார். சூஃபி சமயப் பிரிவினரின் பிரார்த்தனை மையத்தின் கோபுரம், கட்டிட உயரம் தொடர்பான கட்டுப்பாடுகளை மீறுவதாக இருப்பதால் அதை அகற்றும்படியும் நீதிபதி பொலீஸிற்கு உத்தரவு பிறப்பித்தார். இத்தீர்ப்பைத் தொடர்ந்து, சுனி முஸ்லிம்களைக் கொண்ட ஒரு குழு, சூஃபி பள்ளிவாசலைத் தாக்கியபோது, இரண்டு, அகில இலங்கை தரிக்கத்துல் மூஃபிஹின் அங்கத்தவர்கள் கொல்லப்பட்டதுடன், பலருக்குக் காயங்களும் ஏற்பட்டன; பல ஆயிரம் டொலர்கள் பெறுமதிவாய்ந்த அரசாங்கச் சொத்துக்களும் தனியார் சொத்துக்களும் சேதத்திற்குள்ளாயின. இம்மோதலைத் தீர்க்கும் முகமாக, அகில இலங்கை தரிக்கத்துல் முஃபிஹீன் அங்கத்தவர்கள் தமது தலைவரின் சடலத்தை அகழ்ந்தெடுத்து, அதைப் பொது மையவாடியொன்றில் அடக்கஞ்செய்தனர்.

2006ஆம் ஆண்டு, நொவெம்பர் மாதம் 22 ஆந் திகதி, கண்டி மாவட்டத்தில், கம்பளையில், மாவத்துரையில் அமைந்துள்ள வெளிச்சவீட்டுத் தேவாலயத்திற்கு, இனந்தெரியாதவர்கள் குண்டு வைத்தனர். தேவாலய ஊழியர் ஒருவர் காயமடைந்தார். பாறாங்கற்கள், முன் ஜன்னலைத் தகர்த்து, கூரையினூடாக வெளியே வந்தன. ஊழியர், பிரதேச வைத்தியசாலையொன்றில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். பாதிரியார், பொலீஸில் ஒரு முறைப்பாட்டைப் பதிவு செய்தார்.

2006ஆம் ஆண்டு, நொவெம்பர் மாதம் 12ஆந் திகதி புத்தள மாவட்டத்திலுள்ள ஆனமடுவையில், பிரார்த்தனைக் கோபுரத் தேவாலயத்தைச் சேர்ந்த நான்கு உறுப்பினர்கள். மரணச் சடங்கில் கலந்துவிட்டுத் திரும்பும்போது பலரினால் அழைத்துச் செல்லப்பட்டு, அடிக்கப்பட்டுக் கல்லெறிகளுக்கும் ஆளாக்கப்பட்டனர். தேவாலயத்தின் பாதிரியார் இச்சம்பவத்தைப்பற்றி பொலீஸிற்கு முறைப்பாடு செய்தபோது, உரத்த சத்தத்துடன்கூடிய பிரார்த்தனையினால், அவர்கள் அயலட்டையில் உள்ளவர்களின் அமைதியைக் குலைக்கின்றார்கள் என்று தாக்கியவர்கள் குற்றஞ்சாட்டினார்கள். அக்கம்பக்கத்தில் வாழ்ந்தவர்களுள் பலர் கிறிஸ்தவர்களென்றும் தமது வழிபாடு, வாரத்தில் ஒரு முறை, ஒரு மணித்தியாலத்திற்கு நடந்ததென்றும் பாதிரியார் கூறினார். பொலீஸார், பாதிரியாரின் சார்பில் தலையிட்டனர். தாக்கியவர்கள், தாம் இனிமேல் தேவாலய அங்கத்தவர்களைத் தொந்தரவு செய்ய மாட்டார்களென்று வாக்களித்தார்கள்.

2006 ஆம் ஆண்டு, நொவெம்பர் மாதம் 12 ஆந் திகதி, நாவலப்பிட்டியில், வழிபாட்டிற்காகக் கூடியிருந்த மிஸ்பஹ் பிரார்த்தனைக் குழுவின் வழிபாட்டை அங்கு வந்த ஒரு கும்பல் தடை செய்து, பிரார்த்தனையை உடனடியாக நிறுத்தும்படி வற்புறுத்தியது. 12 பௌத்த பிக்குகள், உள்;ர் ஆட்சி மன்றத்தின் ஓர் உறுப்பினர், உள்;ர்ச் செய்தித்தாள்களைச் சேர்ந்த இரண்டு பத்திரிகையியலாளர்கள், என்போரை உள்ளடக்கிய இக்கும்பல், பிரார்த்தனைக்காகக் கூடியிருந்தோரை விரட்டியடித்தது. பாதிரியாரைக் கொன்றுவிடப் போவதாகக் கும்பல் அச்சுறுத்தியது. இக்குழு மீண்டும் தேவாலயத்திற்குச் சென்று அங்கிருந்த ஊழியர்களை அச்சுறுத்தியது. தாக்கியவர்களுள் ஒருவர், தேவாலய ஊழியர் ஒருவரை ஒரு குண்டாந்தடியால் அடித்தார். மற்றவர்கள் கதிரைகளை உடைத்தனர். தேவாலயம், பிரதேசப் பொலீஸ் நிலையத்தில் ஒரு முறைப்பாட்டைப் பதிவு செய்தது. இவ்வறிக்கை உள்ளடக்கும் காலப்பகுதியில், பொலீஸ் எவரையும் கைது செய்யவில்லை.

2006 ஆம் ஆண்டு, நொவெம்பர் மாதம் 8 ஆந் திகதி துப்பாக்கிகளை ஏந்திய ஒரு கும்பல், கிழக்கிலிருக்கும் காத்தாங்குடியில், பதுலியவிலிருக்கும் அல்-ஜும்மா பள்ளிவாசலுக்கு வானில் வந்து, அதன் அலுவலகத்தைத் தாக்கியது. அலுவலகத்திலிருந்த வர்களைக் கும்பல் தாறுமாறாகச் சுட்டதில் ஆறு பேர் காயமடைந்தனர். முன்னர் ஒரு முறை இப்பிரதேசத்தில் இதே பள்ளிவாசலில் நடந்த ஒரு மோதலின் போது, இரண்டு முஸ்லிம் குழுக்களுக்கிடையில் எழுந்த ஒரு சச்சரவு தீர்க்கப்படாததை அடிப்படையாகக் கொண்டே இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நடந்ததென்று காத்தாங்குடி பொலீஸார் நம்புகின்றார்கள்.

2006 ஆம் ஆண்டு, ஒக்டோபர் மாதம் 30 ஆந் திகதி, பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு குழு, மாத்தறையில் பொல்ஹேனையிலுள்ள, லங்கா கல்வரி தேவாலயத்தைச் சேர்ந்த பாதிரியாரை அழைத்துச் சென்றது. மற்றவர்கள் பார்த்துக்கொண்டு நிற்க, இரண்டோ மூன்று பேர் பாதிரியாரை அடித்தனர். இதன் பயனாகப் பாதிரியாருக்கு ஏற்பட்ட காயங்களினால், அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அவர், மாத்தறை பொலீஸ் நிலையத்தில் ஒரு முறைப்பாட்டைப் பதிவு செய்தார்.

2006 ஆம் ஆண்டு, ஒக்டோபர் மாதம் 29 ஆந் திகதி, 'அஸெம்ப்ளி ஒ.ஃப் கோட்' என்ற தேவாலயக் குழுவினர் கம்பஹ மாவட்டத்திலுள்ள யக்கலையில் வழிபாட்டிற்காகக் கூடினர். பிரதேசத்தைச் சேர்ந்த நான்கு பிக்குகள் உட்பட ஏறத்தாழ 50 பௌத்தர்களைக் கொண்ட ஒரு குழு, வழிபாட்டு இடத்திற்கு வந்து வழிபாட்டை நிறுத்தும்படி வற்புறுத்தியது. பௌத்தக் கிராமத்தில், கிறிஸ்தவத் தேவாலயம் ஒன்று இருக்க வேண்டிய அவசியம் எதுவுமில்லை என்று புத்த பிக்குகள் பாதிரியாரிடம் கூறினார்கள். வன்முறையைத் தவிர்ப்பதற்காக, அவ்வார வழிபாட்டை ரத்துச் செய்வதற்குப் பாதிரியார் உடன்பட்டார். அவர், தேவாலயத்தை நிரந்தரமாக மூடி விட வேண்டுமென்றும், அப்படிச் செய்யாவிட்டால், பாரதூரமான விளைவுகளை அவர் எதிர்நோக்க வேண்டி ஏற்படும் என்றும் கும்பல் கூறியது. பாதிரியார், பொலீஸில் முறைப்பாடு செய்தார்; வழிபாட்டிற்காகக் கூடுபவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்குப் பொலீஸார் இணங்கினார்கள். இருந்தபோதிலும், நொவெம்பர் மாதம் 12 ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை, தேவாலயத்திற்குச் செல்லும் தெருவில் கும்பல்கள் கூடின. கிறிஸ்தவ மதத்திற்கெதிரான சுவரொட்டிகள் போடப்பட்டன. நூறிற்கும் மேற்பட்ட பௌத்த எதிர்ப்பாளிகள் - இவர்களுள் சிலர் குண்டாந்தடிகளை வைத்திருந்தனர் - கிறிஸ்தவர்கள் வழிபாடுகளுக்குச் செல்வதைத் தடுத்தனர்.

பாதிரியார், பொலீஸாரை அழைத்தார். ஆனால், இரண்டு அலுவலர்கள் மட்டுமே வந்தார்கள். கும்பலைக் கட்டுப்படுத்த அவர்களால் முடியவில்லை. பொலீஸார், மேலும் அலுவலர்களை வரவழைத்து இறுதியில் கும்பலைக் கலையச் செய்தனர். நொவெம்பர் மாதம் 13 ஆந் திகதி, ஒரு பாத்திரத்தில் கொண்டுவந்த கரிய எண்ணெய்யை, பாதிரியாரின் வீட்டிற்குச் சென்றுகொண்டிருந்த ஒரு யுவதியின் மீது ஒருவர் ஊற்றினார். அப்பெண், கம்பஹ பொலீஸ் நிலையத்தில் ஒரு முறைப்பாட்டைப் பதிவு செய்தார்.

2006 ஆம் ஆண்டு, ஒக்டோபர் மாதம் 23 ஆந் திகதி குருநாகலையில், கோனவலை நகரத்தில் வின்யார்ட் ஜனசமூகத் தேவாலயத்திலிருந்த ஒரு தேவாலய ஊழியரும் அவருடைய குடும்பத்தினரும், பொலீஸ் அலுவலர்கள் என்று கூறிக்கொண்டு வந்த ஐந்து பேரினால் தாக்கப்பட்டனர். இவர்கள் குடும்பத்தை அச்சுறுத்தி, அந்த ஊழியரைக் குண்டாந் தடியினால் அடித்து, ஒரு குழந்தையை ஆவேசத்துடன் உலுப்பினர். அவர்கள், கழுத்துமாலை ஒன்றையும் திருடி, கட்டிடத்தின் மின்சாரப்பாய்ச்சலைச் சேதம் செய்தனர்; தொட்டிகளையும் பூச்சாடிகளையும் நொருக்கினர். அடிக்கப்பட்ட மனிதர் பாரதூரமான உட்காயங்களுக்காளானார். ஒக்டோபர் மாதம் 30ஆந் திகதி, பத்துப் பேர் மீண்டும் வின்யார்ட் ஜனசமூகத் தேவாலயத்தைத் தாக்கினர். அவர்கள், கட்டிடத்திற்குத் தீ வைக்க முயன்றபோதிலும் அதைச் செய்ய முடியவில்லை. இத்தாக்குதலின்போது, ஒருவரும் காயப்படவில்லை. தேவாலய அங்கத்தவர்கள், பன்னலை பொலீஸில் முறைப்பாடொன்றைப் பதிவு செய்தனர். ஆனால், இவ்வறிக்கை உள்ளடக்கும் காலப்பகுதியில் ஒருவரேனும் கைது செய்யப்படவில்லை.

2006ஆம் ஆண்டு, ஒக்டோபர் மாதம் 13ஆந் திகதி, பொலன்னறுவையில் ஹிங்குராக் கொடையிலுள்ள பிரார்த்தனை மையமொன்று அழிக்கப்பட்டு, தீயிடப்பட்டதென்று, இலங்கை, கிறிஸ்தவ மதம் பரப்பும் தேசிய சம்மேளனம் அறிவித்தது. இனந்தெரியாத தாக்குநர்கள், ஓர்கன் வாத்தியக் கருவி, கம்பளம், பாய்கள் போன்றவற்றைத் திருடினர். கட்டிடத்தின் உட்பகுதியை மனிதக் கழிவுகள் கொண்டு அசுத்தப்படுத்தினர். அதன் பின்னர், விவிலிய நூல்களுக்கும் துதிப்பாடல் நூல்களுக்கும் தீயிட்டுக்கொளுத்தினர். பாதிரியார், பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றைப் பதிவு செய்தார். பொலீஸார் புலன் விசாரணை செய்கிறார்கள்.

2006 ஆம் ஆண்டு, ஒக்டோபர் மாதம், அநாமதேயக் குழுவொன்று, நத்தார் நிகழ்ச்சிகள் யாவற்றையும் ரத்து செய்யும்படி கொழும்பிலுள்ள பெரும்பாலான கத்தோலிக்கப் பாடசாலைகளுக்கும் கிறிஸ்தவப் பாடசாலைகளுக்கும் அச்சுறுத்தும் கடிதங்களை அனுப்பியது. பிள்ளைகளின் மீது கரிசனை கொண்ட ஒரு அமையமென்று, இக்குழு, தன்னை அடையாளம் காட்டியது. நத்தார் நிகழ்ச்சிகளை நடத்தும் பாடசாலைகளுக்கெதிராகக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்று எச்சரிக்கும் விதத்தில் தமக்குத் தொலைபேசி அழைப்புக்கள் வந்ததாகச் சில பாடசாலைகள் அறிவித்தன. கத்தோலிக்கப் பாடசாலை ஒன்றிற்கு அனுப்பப்பட்ட அச்சுறுத்தற் கடிதம் ஒன்றில், பிள்ளைகள், நத்தார் களியாட்டங்களைக் கைவிட்டு அவற்றிற்குப் பதிலாக, வடக்கிலும் கிழக்கிலும் சேவை செய்யும் பாதுகாப்புப் படையினருக்கென நன்கொடையாகப் பணத்தை வழங்க வேண்டுமென்று கூறப்பட்டிருந்தது. இந்த அச்சுறுத்தல்களைப் பொருட்படுத்தாது, பாடசாலைகள் நத்தார் நிகழ்ச்சிகளை நடத்தின. ஆனால், எதிர்விளைவுகள் ஒன்றும் இடம்பெறவில்லை.

பிரதேசத்திலுள்ள அநாதை இல்லத்தைத் திருத்தும் வேலைகளை நிறுத்தும்படி கோரி, ஒல்லாந்தச் சீர்திருத்தத் தேவாலயம் பற்றிய சுவரொட்டிகள், 2006 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம், பலன கடுகன்னாவையில் தோன்றத்தொடங்கின. இலங்கை, கிறிஸ்தவ மதம் பரப்பும் தேசியச் சம்மேளனத்தின்படி, ஏறத்தாழ 200 பேர் அநாதை இல்ல வளவிற்குள் பலவந்தமாக நுழைந்து, சொத்துக்களை அழிக்க ஆரம்பித்தனர். பௌத்தக்கொடி ஒன்று கூரையில் ஏற்றப்பட்டது. 2006 ஆம் ஆண்டு, பகுதி உள்ளூர் சபை, எவ்விதக் காரணங்களும் காட்டாமல், திருத்த வேலைகளுக்கெனத் தான் வழங்கிய உத்தரவுச் சீட்டைத் தள்ளுபடி செய்தது. தேவாலய அங்கத்தவர்கள், பிரதேச பொலீஸ் நிலையத்தில் ஒரு முறைப்பாட்டைப் பதிவு செய்தனர்.

2006ஆம் ஆண்டு, ஜுலை மாதம் 1ஆந் திகதி, இரத்தினபுரி மாவட்டத்தில், ஹப்புகஸ்தென்னையில் அமைந்துள்ள ஹார்வஸ்ட் சர்வதேசத் தேவாலயத்தை ஒரு கும்பல் தாக்கியது. தாக்கியோர், சொத்துக்களை நொருக்கியதுடன் அவற்றைச் சூறையாடினர். தேவாலய ஊழியர்கள் இருவர் கடுமையான காயங்களுக்குள்ளாயினர். இவர்களுள் ஒருவருக்குச் சிறு சத்திரசிகிச்சை ஒன்று அவசியப்பட்டது. தேவாலயத்தை மூடாவிட்டால், பாதிரியாரையும் அவருடைய குடும்பத்தினரையும் கொலை செய்யப்போவதாகக் கும்பல் அச்சுறுத்தியது. பிரதேச பொலீஸ் நிலையத்தில், பாதிரியார் ஒரு முறையீட்டைப் பதிவு செய்தார். பொலீஸார் புலன் விசாரணை செய்கின்றனர். ஆனால், இவ்வறிக்கை உள்ளடக்கும் காலப் பகுதியில் ஒருவரும் கைது செய்யப்படவில்லை.

2006 ஆம் ஆண்டு ஜூன் மாதம், தனியார் சங்கமான அகில இலங்கை பௌத்த கொங்கிரஸ், பௌத்தர்களைப் பிற மதங்களுக்கு மதம் மாற்றுதல் தொடர்பான மூலோபாயங்கள் பற்றியும் நிதி வழங்கல் பற்றியும் ஆராய்வதற்கு, விசாரணை ஆணையம் ஒன்றை நியமித்தது. அகில இலங்கை பௌத்த கொங்கிரஸ் அலுவலர்கள், 2007 ஆம் ஆண்டு முடிவதற்குள் அறிக்கையைப் பிரசுரிக்க எண்ணியுள்ளது.

2006 ஆம் ஆண்டு, மே மாதம், கண்டி, கம்பளையிலுள்ள ∴போர்ஸ்குவெயார் கொஸ்பல் தேவாலயத்தின் பாதிரியாருக்கு மரண அச்சுறுத்தல் ஒன்று விடுக்கப்பட்டது. அதன் பின்னர், விரைவில், பிரதேச சமூக நலன்புரி அலுவலர் ஒருவரும் மூன்று பௌத்த பிக்குகளும், தம்முடன் பொலீஸ் நிலையத்திற்கு வரும்படி பாதிரியாரை வற்புறுத்தினர். தனது உத்தியோகபூர்வமான அடையாள அட்டையையும் தேவாலயத்தின் கூட்டிணைப்பு அதிகாரச் சட்டத்தின் ஒரு பிரதியையும் பாதிரியார், பொலீஸ் நிலையத்தில் காட்டினார். பாதிரியாரை மேலும் தொந்தரவு செய்ய வேண்டாமென்று, நலன்புரி அலுவலருக்கும் பிக்குகளுக்கும் பொலீஸ் கடுமையான அறிவுரை வழங்கியது. எனினும், தனக்கு அனுப்பப்பட்ட கொலை அச்சுறுத்தல் பற்றிய உத்தியோகபூர்வமான முறைப்பாடு பற்றிய ஒரு பிரதியைத் தனக்கு வழங்கும்படி பாதிரியார் கேட்டபோது, பொலீஸார் அதை வழங்கவில்லை. ∴போர் ஸ்குவெயார் கொஸ்பல் தேவாலயத்தின் கொழும்புத் தலைமை அலுவலகம், இச்சம்பவம் பற்றிப் பிரதேச பொலீஸாருடன் பேசிய போது, பாதிரியாரின் முறைப்பாடு பற்றிய எந்தவிதமான பதிவும் இல்லை என்று அவர்கள் கூறினார்கள். கம்பளை அமைவிடத்தில் தொடர்ந்தும் சந்திப்பது அபாயகரமானதென்று பாதிரியார் எண்ணியதால் இவ்வறிக்கை உள்ளடக்கும் காலப்பகுதியில், வழிபாட்டாளர்கள் வேறோர் இடத்தில் ஒன்று கூடினார்கள்.

2006 ஆம் ஆண்டு, மே மாதம் 2 ஆந் திகதி, த யுனைடட் கிறிஸ்டியன் ∴பெலோஷிப், காலி மாவட்டத்தில், பொட்டலையில் தான் கொள்வனவு செய்த காணியில், ஜனசமூக மண்டபம் ஒன்றைக் கட்ட ஆரம்பித்தது. 2006 ஆம் ஆண்டு மே மாதம் 6 ஆந் திகதி, ஒரு பிக்குவின் தலைமையில் வந்த ஒரு கும்பல், வளவினுள் பிரவேசித்து, கட்டிட வேலையில் ஈடுபட்டிருந்த ஊழியரையும் பாதியாரையும் அச்சுறுத்தியது. ஊழியரின் சட்டையைப் பிடித்திழுத்து, அவரையும் பாதிரியாரையும் வார்த்தைகளினால் திட்டியது. கட்டிடம் ஜனசமூக மையமாக இருக்கப்போகின்றதென்று பாதிரியார் விளக்கிய போதிலும், ஒரு தேவாலயம் கட்டப்பட்டால், கட்டிடத்தைத் தரைமட்டமாக்குவதாக அல்லது அதற்குத் தீ வைப்பதாகக் கும்பல் அச்சுறுத்தியது. பாதிரியார் இச்சம்பவத்தைப் பற்றிப் பிரதேச பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றைப் பதிவு செய்தார். கட்டிட வேலைகள் நிறுத்தப்பட்டன; அவ்வேலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவில்லை. இவ்வறிக்கை உள்ளடக்கும் காலப்பகுதியில் அச்சுறுத்தல்கள் தொடர்ந்தும் இடம்பெற்றன. வேலைகள் மீள ஆரம்பிக்கப்படவில்லை.

2003 ஆம் ஆண்டு முதல், பௌத்த பிக்குகள் விடுத்த அச்சுறுத்தல்கள் காரணமாக மூடப்பட்டிருந்த, பிலியந்தலையிலுள்ள ஒரு மெதடிஸ்ட் தேவாலயம், 2006ஆம் ஆண்டு, ஏப்ரில் மாதம் 23ஆந் திகதி முதற் தடவையாக மீண்டும் திறக்கப்பட்டது. மீளத் திறக்கப்பட்ட போது, அதே பிக்குகளைக்கொண்ட குழுவின் தலைமையில் வந்த ஒரு கும்பல் வழிபாட்டாளர்களின் வாகனங்களைச் சேதப்படுத்தியது. 2006ஆம் ஆண்டு ஏப்ரில் மாதம் 30ஆந் திகதி, தீ வைக்கப்பட்ட டயர்கள், தேவாலயத்திற்கு வெளியிலுள்ள தெருவில் வைக்கப்பட்டிருந்தன. 2006ஆம் ஆண்டு, ஜூன் மாதம் 16ஆந் திகதி நீதி மன்றத்தில் வழக்குக் கேட்டல் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது. நீதி மன்றத்தில் வழக்குக் கேட்டல் ஒழுங்குப்படுத்தப்பட்டிருந்தது. நீதி மன்றத்தின் மூன்று அமர்வுகளின் பின்னர், நீதிவான், எச்சரிக்கை செய்து, இரு தரப்பினரையும் விடுவித்தார். சொத்தையும் வாகனங்களையும் இழந்த வழிபாட்டாளர்கள் நஷ்ட ஈடு பெறுவதற்காகத் தனித்தனியாக வழக்குகளைகத் தொடர்ந்தார்கள். பிரதேசத்தைச் சேர்ந்த சில பௌத்த பிக்குகளின் தலைமையில் செயற்படும் கிராம மக்களைக்கொண்ட குழுவொன்று தொடர்ந்தும் தடைகளை ஏற்படுத்திக் கொண்டிருந்ததால், தேவாலயம் தற்பொழுது செயற்படுவதில்லை.

2006 ஆம் ஆண்டு, ∴பெப்ரவரி மாதம் 14ஆந் திகதி அல்பிட்டியைச் சேர்ந்த ஒரு பாதிரியார், பொலீஸ் நிலையத்திற்கு அழைக்கப்பட்டார். அங்கு, ஐந்து பௌத்த பிக்குகள் உட்பட, ஏறத்தாழ எண்பது பேர் குழுமி நின்று, நன்னெறிசாராத மதமாற்றங்களில் அவர் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டினர். வழிபாட்டிற்காக, வழிபாட்டாளர்களைக் கூட்ட வேண்டாமென்று அவருக்குக் கூறப்பட்டது. பொலீஸார் இருந்தபோதே கும்பல் அவரை அச்சுறுத்தி, ஒரு குடையால் அடித்தது. அன்று, சற்றுப் பின்னர், கும்பல், பாதிரியாரின் வீட்டைத் தாக்க முயன்றது. பாதிரியார் மனைவியுடனும் பிள்ளைகளுடனும் வீட்டை விட்டு ஓடிச் சென்று பொலீஸிற்கு அறிவித்தார். பொலீஸ் வந்து, கும்பலைக் கலைத்தது. 2006ஆம் ஆண்டு ∴பெப்ரவரி மாதம் முழுவதும், மரண அச்சுறுத்தல்கள் உட்பட வேறு தொந்தரவுகளுக்குமுள்ளானார். அத்துடன், அப்பாதிரியாருக்கும் அவருடைய குடும்பத்தி னருக்கும் உதவுவோரையும் அச்சுறுத்தி, சுவரொட்டி இயக்கம் ஒன்று நடத்தப்பட்டது. வழிபாட்டாளர்கள், பாதிரியாரைச் சந்திக்க

வந்தபோது, அவர்களும் தொந்தரவுசெய்யப்பட்டார்கள். முந்திய நெருக்கடி நிலைமையின் போது, அச்சுறுத்தப்பட்ட பாதிரியாருக்கும் அவருடைய குடும்பத்தினருக்கும் தங்கும் வசதி வழங்கிய ஒரு குடும்பத்தினரின் வீட்டில், 2006ஆம் ஆண்டு, மார்ச் மாதம் எரிந்த (வெந்த) எண்ணெய்யும் மனிதக் கழிவுகளும் வீசப்பட்டிருந்தன. உதவி செய்த அவ்வீட்டுக்காரர்களின் பிள்ளைகளின் சுகவீனம் பற்றி ஆராய்ந்த போது, 2006ஆம் ஆண்டு, மார்ச் மாதம், 2ஆந் திகதி, தமது கிணற்றிற்குள் வடிதாரை விதைகளும் எரிந்த (வெந்த) எண்ணெய்யும் இடப்பட்டுத் தூய்மை கெடுக்கப்பட்டிருந்ததைக் குடும்பத்தினர் கண்டுபிடித்தனர். குடும்பத்தினர், பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றைப் பதிவு செய்தனர். வழிபாட்டாளர்கள் கூடுவதில்லை; பாதிரியார் வழிபாடுகளை நடத்துவதும் இல்லை. பொலீஸ் விசாரணையின் விளைவாக ஒருவரேனும் கைது செய்யப்படவும் இல்லை. கூடுவதை நிறுத்தும்படி, பொலீஸ். வழிபாட்டாளர்களுக்குப் புத்திமதி வழங்கியது. இத்தேவாலயம் இப்பொழுது செயற்படுவதில்லை.

2006 ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் 22 ஆந் திகதி, கம்பஹ மாவட்டத்திலுள்ள, பொல்லத்த என்ற இடத்தில், பௌத்த பிக்குகளும் ஒரு கத்தோலிக்க குருவும் உட்பட்ட ஒரு பெரிய கும்பலை, தேவாலயத்திற்குச் சென்றோர் எதிர்நோக்கினர். கும்பல், அட்டைகளை ஏந்தியவாறு, அச்சுறுத்தல்களைக் கூறிக் கத்தியபடி, தேவாலய வழிபாடுகளை நிறுத்தும்படி கூறியது. பாதிரியார், தனது தேவாலயத்தினுள், தன் சொந்த கிராமத்தைச் சேர்ந்த கிறிஸ்தவர்களை மட்டுமே அனுமதிக்க வேண்டுமென்றும் கும்பல் வற்புறுத்தியது. வலுக்கட்டாயத்தின் பேரில், பாதிரியார் இதற்கு இணங்கினார். 2006 ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் 23 ஆந் திகதி, பாதிரியாரின் வீட்டிற்குக் கல் எறியப்பட்டது. 2006 ஆம் ஆண்டு, ∴பெப்ரவரி மாதம் 12 ஆந் திகதி, தேவாலயத்திற்கு வந்தவர்களைக் கும்பல் கண்காணித்து, தேவாலய 'ஓர்க'னை வாசிப்பவர், பக்கத்துக் கிராமத்தைச் சேர்ந்தவர் என்பதைக் கண்டுகொண்டது. கும்பல், அச்சுறுத்த ஆரம்பித்தது. பாதிரியார் பொலீஸை வரவைழத்தார். பொலீஸார் கும்பலைக் கலையச் செய்தனர். ஆனால், வழிப்பாட்டாளர்களை அவரது கிராமத்திற்கு மட்டும் வரையறுத்துக்கொள்ளும்படி பொலீஸார், பாதிரியாரிடம் கூறினார்கள். அப்பொழுது முதல், பாதிரியார், ஞாயிறு வழிபாடுகளைக் கிரமமாக நடத்தவில்லை. இவ்வறிக்கை உட்படுத்தும் காலப்பகுதியினுள், பாதிரியாரும் வழிபாட்டாளர்களும் வழிபாட்டிற்காக மற்றோர் இடத்தில் கூடினார்கள்.

2005 ஆம் ஆண்டு, டிசெம்பர் மாதம் 25ஆந் திகதி, குருநாகல் மாவட்டத்தில் அலவ்வையிலுள்ள கிங்ஸ் ரிவைவல் தேவாலயத்தைச் சேர்ந்த துணை மறை மாவட்டத்தார்கள் வழிபாட்டிற்குச் செல்லும் வழியில் தாக்கப்பட்டார்கள். நான்கு பேர் காயமடைந்தார்கள். தாக்குதலைப் பற்றி அறிவிக்கப்பட்டதும், பொலீஸார் உடனடியாகச் சம்பவ இடத்திற்கு வந்தனர். கும்பல் கலைக்கப்பட்டது. தாக்குதலின் பின்னர், பாதிரியாரின் கிணற்றில் எண்ணெய் ஊற்றப்பட்டது. 2006 ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் 16 ஆந் திகதி, தாக்குவோர், பாதிரியாரின் வீட்டிற்குக் கல் எறிந்தனர்; ஒரு ஜன்னல் உடைக்கப்பட்டது. 2007 ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் 26 ஆந் திகதி, நீதி மன்றம் தேவாலயத்திற்குச் சார்பாகத் தீர்ப்பு வழங்கியது. எனவே, இத்தேவாலயம் அதே அமைவிடத்தில் தொடர்ந்தும் இயங்கி வருகின்றது.

2005ஆம் ஆண்டு, ஜுன் மாதம் 5ஆந் திகதி, காலி மாவட்டத்தில், அம்பலாங் கொடையிலுள்ள, அஸெம்ப்ளி ஒ∴ப் கோட் தேவாலயப் பாதிரியார் புதிதாக வாங்கிய வீட்டின் மீது, கிராமவாசிகள் போத்தல்களை எறிந்தனர். ஜுன் மாதம் 6ஆந் திகதி, ஏறத்தாழ முப்பது பேரைக்கொண்ட கும்பலுக்கும் பாதிரியாருக்கும் இடையில் நடந்த ஒரு வாக்குவாதத்தின் பின்னர், கும்பல் பாதிரியாரின் வீட்டைத் தாக்கி, ஜன்னல்களையும் வேலியையும் சேதப்படுத்தியது. பின்னர், ஐம்பதிற்கும் மேற்பட்டவர்களைக் கொண்டதாக மாறிய கும்பல், பாதிரியாரையும் அவருடைய சகோதரரையும் தாக்கி, பாதிரியாரின் கையடக்கத் தொலைபேசியையும் 2000 டொலர்களுக்கு (200,000 ரூபா) மேற்பட்ட பணத்தையும் திருடியது. வீடு அழிக்கப்பட்டு, அக்காணியில், ஒரு புத்தர் சிலையும் விளக்குகளும் வைக்கப்பட்டன. பொலீஸார் புலனாய்வு செய்து, கால தாமதமின்றி, சிலையையும் விளக்குகளையும் அகற்றினர். ஆறு பேரைக் கைது செய்தனர். இந்த அறிக்கை உள்ளடக்கிய காலத்தின் இறுதியில் இவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டு, சுதந்திரமாக இருந்தனர். 2006 ஆம் ஆண்டு முதலாவது, வழக்குக் கேட்டல் இடம்பெற்றது. பின்னர், தனது வீட்டிற்குக் கல் எறியப்பட்டதென்றும் தான் ஜனசமூக மையமாகப் பயன்படுத்துவதென எண்ணியிருந்த கட்டிடத்தில் கிராம மக்கள் குடியேறியதால், வழங்கப்பட்ட வசதியை பயன்படுத்த முடியாமல் போய் விட்டதென்றும் பாதிரியார் கூறினார். குற்றஞ்சாட்டப்பட்டவர் பாதிரியாரை அணுகி, பாதிரியார் தனது வேலைகளை எந்தவிதப் பிரச்சினையுமின்றிச் செய்வதற்கு அனுமதி வழங்குவதாக வாக்குறுதி அளித்து, பிரச்சினையை நீதி மன்றத்திற்கு வெளியில் தீர்த்துக்கொள்ளலாம் என்று கேட்டுக்கொண்டார். இணக்கங்காணப்படும் எந்தவோர் உடன்பாட்டையும் நீதிவானின் முன்னிலையில் செய்து நீதிமன்றத்தில் பதிவு செய்யலாம் என்று பாதிரியார் கூறினார். 2007ஆம் ஆண்டு, ஏப்ரில் 27ஆந் திகதி, ஜனசமூக மையமாகப் பயன்படுத்தவிருந்த வளவை, சட்டத்திற்கு மாறாகப் பயன்படுத்துவோரை அங்கிருந்து வெளியேறும்படியும் அவர்கள் அமைத்த வேலியை

அகற்றும்படியும் நீதிவான் கட்டளையிட்டார். எனினும், சட்டவிரோதமாகக் குடியிருப்போரிடமிருந்து காணியை மீட்டெடுப்பதற்குத் தனக்கு இப்பொழுதும் பயமாக இருக்கின்றதென்று பாதிரியார் கூறினார்.

2004 ஆம் ஆண்டு, டிசெம்பர் மாதத்தில், கட்டுவனவிலுள்ள அர்ச். மைக்கல் கத்தோலிக்கத் தேவாலயத்திற்குத் தீ வைக்கப்பட்டது. இது, 2003 ஆம் ஆண்டிற்குப் பின்னர் தேவாலயத்திற்கெதிராக மேற்கொள்ளப்பட்ட மூன்றாவது தாக்குதலாகும். இவ்வறிக்கை உள்ளடக்கும் காலப்பகுதியின் போது, பொலீஸ் எவரையும் கைது செய்யவில்லை. வழிபாட்டிற்காக மீள அமைக்கப்பட்ட தேவாலயக் கட்டிடத்தில் கூடும் வழிபாட்டாளர்களின் நலன் கருதி பொலீஸ் ஒரு காவலாளியை வழங்கியது.

2004 ஆம் ஆண்டு, ஒரு பெரிய கும்பல், குருநாகலையிலுள்ள அபோஸ்டல் சார்ந்த தேவாலயம் ஒன்றைத் தாக்கியது. தேவாலயமும் ஊழியர்களின் குடிமனைகளும் தீக்கிரையாக்கப்பட்டன. ஐந்து பேர் கைதுசெய்யப்பட்ட போதிலும், இவ்வறிக்கை உள்ளடக்கும் காலப்பகுதியின் இறுதியில், அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டுச் சுதந்திரமாக இருந்தனர். இவ்வழக்கைக் கேட்டல், 2005 ஆம் ஆண்டு ஜுலை மாதத்திற்குப் பிற்போடப்பட்டது. தாக்கியோர் பிரச்சினையை, நீதிமன்றத்திற்கு வெளியில் தீர்த்துக்கொள்ள விரும்பினர். சம்பவம் சம்பந்தமாகத் தவறிழைத்தது தாம் என்பதைத் தாக்கியோர் ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில், ஒரு தீர்வைக் காணத் தேவாலயம் உடன்பட்டது. சேதங்களுக்கு நஷ்ட ஈடு கோரி, தேவாலயம் குடியியல் வழக்கொன்றையும் தொடர்ந்தது. வழக்குக் கேட்டல்கள் பல சந்தர்ப்பங்களிலும் பிற்போடப்பட்ட போதிலும் அடுத்த, வழக்குக் கேட்டல், 2007 ஆம் ஆண்டு, மே மாதத்திற்குப் பிற்போடப்பட்டது.

### பிரிவு IV: ஐக்கிய அமெரிக்க அரசாங்கத்தின் கொள்கை

மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கான தனது முற்றுமுழுதான கொள்கையின் ஒரு பகுதியாக, ஐக்கிய அமெரிக்க அரசாங்கம், சமய சுதந்திரம் பற்றிய பிரச்சினைகளை, அரசாங்கத்துடன் கலந்துரையாடும். பரந்த அளவிலான மனித உரிமைகள், இன, மதச் சுதந்திரம் என்பன தொடர்பான கரிசனைகளை மீளாய்வு செய்வதற்காக, ஐக்கிய அமெரிக்கத் தூதரக அலுவலர்கள், நாட்டின் சகல சமயக் குழுக்களின் பிரதிநிதிகளையும் கிரமமாகச் சந்திப்பார்கள். இவ்வறிக்கை உள்ளடக்கும் காலப்பகுதியில், கிறிஸ்தவ தேவாலயங்களின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் பற்றிய ஐக்கிய அமெரிக்க அரசாங்கத்தின் கவலையை வெளிப்படுத்துவதற்காகவும் மதமாற்றத்திற்கு எதிரான விஷயங்களை ஆராய்வதற்காகவும் தூதரகப் பிரதிநிதிகள் மிக உயர் மட்ட அரசாங்க அலுவலர்களைச் சந்தித்தனர். ஜனநாயகம், மனித உரிமைகள், தொழில் பணியகத்தின் உதவிச் செயலாளரும் சர்வதேச மதச் சுதந்திரத்திற்கான தூதரும், ஐக்கிய அமெரிக்காவிற்கான இலங்கைத் தூதுவருடன், மதமாற்றத்திற்கு எதிரான விடயங்களைப் பற்றிப் பல சந்தர்ப்பங்களில் கலந்துரையாடியுள்ளார்.

மோதலுக்கு அரசியல் தீர்வு காண்பதை ஐக்கிய அமெரிக்க அரசாங்கம் மிகவும் தீவிரமாக ஆதரிக்கின்றது. அத்துடன், மோதலுக்குச் சமாதானமான தீர்வைக் காண்பதற்கு மதத் தலைவர்கள் மேற்கொள்ள வேண்டிய சமயங்களுக்கிடையிலான முயற்சிகளை ஐக்கிய அமெரிக்கத் தூதரகம் ஆதரிக்கின்றது.

2007 ஆம் ஆண்டு, செப்டெம்பர் மாதம் 14 ஆந் திகதி வெளியிடப்பட்டது.